# பவுலின் கண்களை இயேசு திறந்தார்

**சுவிசேஷ ஊழியத்தைக் குறித்த பவுலின் தரிசனத்தை சிறுவர்களுக்கு போதிக்கவும்.**



**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே. எல்லா வகையான மக்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் தரிசனத்தைப் பவுலுக்கு அருளினீர். தயை செய்து எங்களுக்கும் அதே தரிசனத்தைத் தருவீராக. இயேசுவைப் பற்றி எல்லோருக்கும் சொல்ல நாங்களும் விரும்புகிறோம்."

சிறுவர்களின் இந்த கல்வி நடிவடிக்கைகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்க.

சவுல் எவ்வாறு இயேசுவை சந்தித்தார் என்பதை அப்போஸ்தலர் **22:1-22** ல் இருந்து ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ வாசிக்கலாம் அல்லது மனப்பாடமாகக் கூறலாம். வேறு தேசங்களில் உள்ள மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் எவ்வாறு சவுலை அனுப்பினார் என்பதை இது காட்டுகிறது.

கதையைக் கூறிய பின், கீழ்வரும் கேள்விகளைக் கேட்கவும். விசுவாசிகள் பதில் கூறட்டும். (பதில் கேள்விக்குப் பின்).

1. பவுல் பேசுவதைக் கேட்ட போழுது மக்கள் ஏன் அமைதி ஆனார்கள்? (மனமாற்றத்திற்குப் பிறகு சவுலின் பெயர் பவுல் என்று மாற்றப்பட்டது) (வசனம் 2. அவர் அவர்களுடைய மொழியில் பேசினார்)
2. இயேசுவை சந்திக்கு முன்னர் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை பவுல் என்ன செய்தார்? (5).
3. சவுலை குருடாக்கியது எது? (11)
4. அனனியாவின் மூலமாக தேவன் சவுலுக்குக் கொடுத்த அறிவுரை என்ன? (15, 16)
5. சவுலை தேவன் எங்கு அனுப்பினார்? (21)
6. சவுலின் (பவுலின்) ஊழிய தரிசனத்தைக் குறித்து யூதர்கள் என்ன நினைத்தனர்? (22)

இந்தக் கதையின் பகுதிகளை **நாடகமாக்குக.**

- இந்த நாடகத்தை சிறுவர்கள் வழங்க சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.
- இந்த நாடகத்தை தயாரிப்பதற்காகக் குழந்தைகளுடன் உங்கள் நேரத்தைச் செலவு செய்யவும்.
- எல்லா பகுதிகளையும் உபயோகிக்க வேண்டியதில்லை.
- **பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு** உதவவும்.
- **பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் கீழ்வரும் வேடங்களில் நடிக்கட்டும்.
  **கதை கூறுபவர்.** கதைச் சுருக்கம் கூறி பிள்ளைகளுக்கு பேசுவதை/நடிப்பதை ஞாபகப்படுத்துபவர்.
  **சவுல்** (பின்னர் பவுல் எனப்பட்டார்)
  **இயேசுவின் குரல்**
  **அனனியா**
- **சிறிய பிள்ளைகள்** நடிக்க வேண்டியவை:
  **சவுலின் உடன் இருப்போர்**
  **யூத ஆசாரியர்கள்**
  எருசலேமில் உள்ள **யூத மக்கள் கூட்டம்**

## சவுலின் மனமாற்றம் குறித்த நாடகம், பகுதி I (அப். 9:1-11)

**கதை கூறுபவர்:** கதையின் முதற் பகுதியைக் கூறவும். (வசனம் 1-11), பின் கூறுக, "சவுல் கூறுவது என்னவென்று கேளுங்கள்."

**சவுல்** : ஆசாரியர்களிடம் கூறவும், "நீங்களே ஆட்சி நடத்தும் ஆசாரியர்கள். தமஸ்குவிலே இருக்கும் இயேசுவைப் பின்பற்றும் மக்களை நான் கைது செய்யும்படி எனக்கு ஓர் ஆதாரமான ஓலையைக் கொடுங்கள்! தேவன் இதை நான் செய்யம்படி விரும்புகிறார்."

**சவுலும் அவரோடு இருப்பவர்களும்:** நடந்து போகிறார்கள். திடீரென சவுல் கண்களைப் பொத்திக் கொண்டு அலறியபடி கீழே விழுகிறார்.

**இயேசுவின் குரல்:** (சத்தமாக). "சவுலே! சவுலே! நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே!"

**கூட இருப்பவர்கள்:** கையைப் பிடித்து சவுலை வழிநடத்தியவாறு கூறுகின்றனர், "அந்த ஒளி அவரை குருடாக்கி விட்டது."

## நாடகம், பகுதி 2 (அப். 9:12-21)

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும், வசனங்கள் 12-21, பின் கூற வேண்டியது, "அனனியா கூறுவதைக் கேளுங்கள்!"

**அனனியா:** "சவுலே! உமக்காக ஜெபிக்க தேவன் என்னை அனுப்பினார். உன் பார்வையைப் பெற்றுக்கொள்ளும். யூதர் அல்லாத மக்களுக்கு நீர் சாட்சியாய் இருப்பீர். எழுந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்."

**சவுல்** : கூறுவது, "ஓ! இப்போது என்னால் பார்க்க முடிகிறது. எனது புறக்கண்களும் ஆவிக்குரிய கண்களும் இப்போது திறந்து கொண்டன. இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எல்லோருக்கும் நான் எடுத்துச் செல்ல வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை இப்போது நான் புரிந்து கொள்ளுகிறேன்."

**யூத மக்கள் கூட்டம்:** (கோபத்துடன் கத்துகின்றனர்). "இந்தத் துரோகியைத் துரத்துங்கள்." "இவன் நமது எதிரிகளான புறஜாதி மக்களுக்கு உதவ விரும்புகிறான்."

**கதை கூறுபவர் அல்லது பெரிய பிள்ளை:** உதவிய யாவருக்கும் நன்றி கூறவும். குழந்தைகள் இக் கதையைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் இப் பாடத்தின் முதலில் பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் பெரியவர்களிடம் கேட்கவும்.

புறக்கணிக்கப்பட்ட போதிலும், இயேசுவைப் பற்றி மக்களுக்குக் கூறுவதில் பவுல் எவ்வாறு தன் தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தார் என்பதை விவாதிக்கவும். குழந்தைகளிடம் கேளுங்கள். தேவனுக்கு கீழ்ப்படிவதில் இருந்து நம்மைத் தடுக்க மக்கள் எந்த வகையில் எல்லாம் முயற்சி செய்கிறார்கள்? பிள்ளைகள் உதாரணங்களைத் தருக.

ஓர் உலக உருண்டையின் படத்தை **வரைக**. பிள்ளைகள் அதைப்பார்த்து வரையட்டும். தேவன் உலகத்தில் உள்ள மக்கள் யாவரையும் நேசிக்கிறார் என்பதை இது விளக்குவதாக அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு படத்தைக் காட்டி விவரிக்கவும்.



**விளக்குக:** பலதிறப்பட்ட மக்களிடம் சவுலை அனுப்பியது போல் இயேசுவைப் பற்றி அறியாத மக்களிடம் நம்மை தேவன் அனுப்புகிறார்.

- சவுலின் கண்களைத் திறந்தது போல், பிற மக்களின் தேவைகளைப் பார்க்குமாறு பரிசுத்த ஆவியானவர் நம் கண்களையும் திறக்கிறார்.
- சவுலுக்குத் தந்தது போல் பிற இடங்களில் சபைகளை ஆரம்பிக்க இயேசு நமக்கும் தரிசனத்தைத் தருகிறார்.

**மனன வசனம்** அப். 1:8.

அப். 1:8 கூறும் நான்கு இடங்களை, தன்னைப் பற்றி சென்று கூறும்படி இயேசு நமக்கு கூறுவதாகக் கொள்ளலாம்.

நான்கு இடங்களுக்கும் உதாரணங்களைப் **பிள்ளைகள் கூறட்டும்.**

1. **எருசலேம்,** நாம் வாழும் சமுதாயம்.
2. **யூதேயா,** அருகில் உள்ள வேறு சமுதாயம்.
3. **சமேரியா,** அருகில் உள்ள வேறு கலாச்சார மக்கள்.
4. **உலகத்தின் முடிவு பரியந்தம்,** தூர தேசத்தில் உள்ள மக்கள்.

**சங்கீதம்:** நீதி. 3:13-15 வசனங்களை மூன்று சிறுவர்கள் ஆளுக்கு ஒன்றாக ஒப்புவிக்கட்டும்.

இந்த வாரத்தின் பொருளைப் பற்றி பெரிய பிள்ளைகள் கவிதை, பாடல், நாடகம் எழுதவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net